பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 28 திங்கட்கிழமை 12.07.2021 கதிர் 115

## மேலும் 190 பேர் சிக்கினார்கள்!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 190 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, கடந்த ஆண்டு 2

# 10 கோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சா அனலைதீவுக் கடலில் மீட்பு

## கடத்தி வந்த மூவரும் கடற்படையினரால் கைது





(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

யாழ்., அனலைதீவு கடற்பரப்பில் 344 கிலோ 550 கிராம் கேரள கஞ்சாவை மீட்ட கடற்படையினர், கஞ்சாவைக் கடத்தி வந்த மூவரையும் கைதுசெய்துள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படையினர் இன்று அதிகாலை கடலில் சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கு இடமாக பயணித்த டிங்கிப் படகொன்றை வழிமறித்து சோதனைக்குட்படுத்தினர்.

அதன்போது படகில் 11 பொலித்தீன் பைகளில் சுற்றப்பட்ட 344 கிலோ 550 கிராம் கேரள கஞ்சா காணப்பட்டுள்ளது. 2

## யாழில் ஆலய வளாகத்தில் வாள்வெட்டு ஒருவர் காயம்

### சந்தேகநபர் தலைமறைவு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் ஆலய நிர்வாகத்துடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து ஆலய வளாகத்தினுள் வைத்தே வாள்வெட்டு தாக்குதல் நடத்தப்பட்டதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். 2

## 40 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றல்

இலங்கையில் 2021 ஜனவரி 29 ஆம் திகதி முதல் ஜூலை 11 ஆம் திகதிவரை 40 லட்சத்து 9 ஆயிரத்து 740 பேருக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இன்றும் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகமும் அஸ்ட்ராஜெனெகா நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ள கொவிஷீல்ட், சீனாவின் தயாரிப்பான சினோபோர்ம், ரஷ்ய தயாரிப்பான ஸ்புட்னிக் - வி, பைஸர் ஆகிய 2

# மூடப்பட்டுள்ள பாடசாலைகளை ஓகஸ்ட்டில் திறக்க நடவடிக்கை

## இணையவழிக் கல்வி நிரந்தரத் தீர்வு அல்ல; கல்வி அமைச்சர் பீரிஸ் இன்று தெரிவிப்பு



**பாடசாலை ஆசிரியர்களுக்குத் தடுப்பூசி செலுத்திய பின்னர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் பாடசாலைகளை மீண்டும் திறப்பதற்கு ஆரம்பகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் இன்று தெரிவித்தார்.**

**பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.** 2

## மேலும் 26 ஆயிரம் டோஸ் பைஸர் இன்று அதிகாலை இலங்கைக்கு

இலங்கைக்கு மேலும் 26 ஆயிரம் டோஸ் பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த இரண்டாம் தொகுதி பைஸர் தடுப்பூசிகளே கட்டாரிலிருந்து விமானம் மூலம் இன்று அதிகாலை 02.35 மணியளவில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

அரச மருந்தகக் கூட்டுத்தாபனம் இரண்டு லட்சம் பைஸர் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்யவுள்ளது. அதனடிப்படையில் இரண்டு தொகுதிகளாக இதுவரை 52 ஆயிரம் பைஸர் தடுப்பூசிகள் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மூன்றாம் தொகுதி அடுத்த வாரம் கிடைக்கவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

தற்போது கிடைக்கப்பெற்றுள்ள இரண்டாம் தொகுதி பைஸர் 2

## இணையவழிக் கல்வியில் அரசுக்குப் பெரும் தோல்வி

### யாழில் இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டு



(இ.கலையமுதன்)

மாணவர்களின் இணைய வழிக் கல்வியில் அரசு பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உப தலைவர் தீபன் தலீசன் தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஊடகவியலாளர் 2

## சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் யாழில் கொரோனா விழிப்புணர்வு

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமதப் பேரவையின் ஏற்பாட்டில் கொரோனா விழிப்புணர்வு செயற்பாடு இன்று யாழ். நகரில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கவனம், அபாயம் மற்றும் அவதானம் எனும் தொனிப்பொருளில் யாழ். மாவட்ட சர்வமதப் பேரவையால் கொரோனா விழிப்புணர்வு பதாதைகள் யாழ். நகரப்பகுதியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. குறித்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர், மதத் தலைவர்கள் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## தங்குவதற்கு அறைகேட்ட மகனை அடித்துக் கொலை செய்த தந்தை

### கண்டியில் கொடூரம்

மனைவி மற்றும் கைக்குழந்தையுடன் தங்குவதற்கு வீட்டில் அறையொன்றைக் கோரிய மகனை அவரின் தந்தையும், சகோதரியின் கணவரும் அடித்துப் படுகொலை செய்துள்ள பெருந்துயர் சம்பவம் கண்டி - ஹசலக பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இரு பிள்ளைகளின் தந்தையான சுனில் நிஷாந்த என்ற 28 வயது இளம் குடும்பஸ்தரே இவ்வாறு அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நிரந்தர தொழில் எதுவுமில்லாததால் கூலி வேலை செய்தே சுனில் தனது குடும்பத்தைக் கவனித்து வந்துள்ளார். 2

## மூடப்பட்டுள்ள பாடசாலைகளை............

(முதலாம் பக்க தொடர்ச்சி)

இதனிடையே, கொழும்பு பிராந்தியத்தில் உள்ள அனைத்து ஆசிரியர்களுக்கும் இன்று ஆரம்பமாகியுள்ள தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை நாளை வரை தொடரும் என்றும் அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

நாட்டில் 2 லட்சத்து 42 ஆயிரம் ஆசிரியர்கள் உள்ளனர் என்றும், அவர்களில் பெரும்பாலானோருக்கு ஏற்கனவே தடுப்பூசி போடப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதன்போது, ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்கள் முன்னெடுத்த போராட்டத்தில் இடம்பெற்ற கைது நடவடிக்கை காரணமாக இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கைகளில் இருந்து ஆசிரியர்கள் விலகியுள்ளமை தொடர்பிலும் ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினர்.

அதற்குப் பதிலளித்த கல்வி அமைச்சர், சில ஆசிரியர்கள் மட்டுமே இன்று கற்பிப்பிலிருந்து விலக நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும், இருப்பினும், இணையவழி கல்வியைத் தொடர வேண்டும் என்றாலும் அது நிரந்தரத் தீர்வு அல்ல என்றும் குறிப்பிட்டார்.

## 40 இலட்சத்து....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தடுப்பூசிகள் இலங்கையில் மக்களுக்கு ஏற்றப்பட்டு வருகின்றன.

இதன்படி கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 9 லட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு ஏற்றப்பட்டுள்ளது. இவ்வாறு முதலாவது டோஸைப் பெற்றுக்கொண்டவர்களில் 3 லட்சத்து 85 ஆயிரத்து 669 பேருக்கு இரண்டாம் டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

2021 மார்ச் 26 ஆம் திகதி முதல் ஜூலை 11 ஆம் திகதிவரை 29 லட்சத்து 40 ஆயிரத்து 706 பேருக்கு சினோபோர்ம் தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. இதன் இரண்டாவது டோஸை 10 லட்சத்து 46 ஆயிரத்து 840 பேர் பெற்றுள்ளனர்.

'ஸ்புட்னிக்-வி' தடுப்பூசி ஏற்றும் பணி ஏப்ரல் 30 ஆம் திகதி ஆரம்பமானது. இதுவரை ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 444 பேருக்கு அந்தத் தடுப்பூசியின் முதலாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது. இதில் 14 ஆயிரத்து 464 பேர் இரண்டாம் டோஸைப் பெற்றுள்ளனர்.

பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணி ஜூலை 7ஆம் திகதி ஆரம்பமானது. அதன் முதலாவது டோஸை இதுவரை 18 ஆயிரத்து 384 பேர் பெற்றுள்ளனர்.

## யாழில் ஆலய.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் சித்தங்கேணி சிவன் கோயில் வளாகத்தில் நேற்று நடைபெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

ஆலய நிர்வாகத்தில் உள்ள ஒருவருக்கும், மற்றுமொருவருக்கும் ஆலயம் தொடர்பில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது. வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்தவரை மற்றைய நபர் தன் உடைமையில் மறைத்து வைத்திருந்த வாளினால் அவரை வெட்டி விட்டு அங்கிருந்து தப்பியோடியுள்ளார்.

குறித்த நபர் தப்பியோடும்போது அவர் கொண்டு வந்திருந்த வாள் தவறி விழுந்துள்ளது. அதனை அங்கிருந்தவர்கள் மீட்டு வட்டுக்கோட்டைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அதேவேளை, வாள்வெட்டுக்கு இலக்கான நபரையும் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## 10 கோடி 30.....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

அதனையடுத்து அவற்றை மீட்ட கடற்படையினர், படகில் இருந்த மூவரையும் கைதுசெய்து படகையும் கைப்பற்றினர்.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா, படகு, கைது செய்யப்பட்ட மூவரையும் காங்கேசன்துறை கடற்படை முகாமுக்குக் கொண்டு வந்த கடற்படையினர் மேலதிக நடவடிக்கைகளுக்காகக் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

அதேவேளை, மீட்கப்பட்ட கேரள கஞ்சாவின் சந்தை பெறுமதி 10 கோடி 30 லட்சம் ரூபா எனக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

## மேலும் 190...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

ஒக்டோபர் மாதம் முதல் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 49 ஆயிரத்து 449 ஆக அதிகரித்துள்ளது எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

## மேலும் 26.......

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தடுப்பூசிகள் மன்னார் மாவட்ட தடுப்பூசி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இணையவழிக்...

(முதலாம் பக்க தொடர்ச்சி)

சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது நடைமுறையில் உள்ள இணையவழிக் கல்வியை நிறுத்துமாறு அனைத்து ஆசிரியர் தொழிற்சங்கங்களும் அறிவித்துள்ளன. அதற்கமைய இணையவழிக் கல்வியை நிறுத்துகின்றோம்.

மாணவர்களின் இணையவழி கல்வியில் அரசு பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது. இதனடிப்படையிலேயே மீண்டும் பாடசாலை ஆரம்பிப்பது, பரீட்சைகளை நடத்தி சாதாரணமான நிலையில் அனைத்தும் உள்ளது என்று கூற அரசு முனைகின்றது.

மலையக மக்களது 1,000 ரூபா சம்பளம் பெரும் பிரச்சினையாக உள்ள நிலையில் அந்த மாணவர்களின் இணையவழிக் கல்வி சாத்தியமற்ற ஒன்று. இணைய வசதிகள் அற்ற நிலையில் மரத்திலும், கூரைகளிலும், மலைகளிலும் ஏறி 'சிக்னல்' பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது .இதில் மாணவர்களின் இணையவழிக் கல்வி என்பது 15 வீதமே சாத்தியமாகியுள்ளது- என்றார்.

## தங்குவதற்கு அறைகேட்ட ...................

(முதலாம் பக்க தொடர்ச்சி)

தனது பெற்றோரின் வீட்டில் பின்பகுதியில் இவர்களுக்காக அறையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. அதில்தான் வசித்து வந்துள்ளனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் சுனிலின் மனைவிக்கு மற்றுமொரு குழந்தை பிறந்துள்ளது. எனவே, அவர்கள் பாதுகாப்பாக தங்குவதற்கு வீட்டினுள் அறையொன்றைக் கோரியுள்ளார். இதனை அடிப்படையாகவைத்தே கடந்த 6ஆம் திகதி மோதல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது சுனிலின் தந்தையும் மச்சானும் இணைந்து அவரைக் கடுமையாகத் தாக்கினர் எனப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த சுனில் மஹியங்கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனையடுத்து அவரின் சடலம் ஊருக்குக் கொண்டுவரப்பட்டது. பிரதேசவாசிகள் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கவில்லை. ஊரிலுள்ள பிரஜா நிலையத்தில் வைத்து இறுதிச் சடங்கு நடத்தினர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன.

ZOOM மூலம் IELTS வகுப்பு

ஓய்வுபெற்ற ஆங்கில போதனாசிரியரின் zoom மூலமான IELTS (Academic/General) பரீட்சை வகுப்பு. தனிப்பட்ட கவனம். பயில விரும்புவோர் தொடர்பு கொள்க:-
076- 5500036

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## ரெலோவின் அழைப்பு

தமிழ்த் தேசியக் கட்சிகளை ஒற்றுமைப்படுத்தி, ஒரு வழிக்குக் கொண்டு வரும் தமிழீழ விடுதலைக் கழகத்தின் (ரெலோவின்) தற்போதைய முயற்சிகள் சர்ச்சைக்குள்ளாகியிருக்கின்றன.

அதையொட்டி அக்கட்சியின் பேச்சாளர் சுரேந்திரன் குருசுவாமி முன்வைத்திருக்கும் சில கருத்துக்கள் இந்தச் சமயத்தில் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியவை.

வடக்கு, கிழக்குத் தமிழர்கள் மத்தியிலே இன்று தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கும் தரப்புகள், கட்சிகள் என்று பார்த்தால் அவை எல்லாமே ஒரு காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் செயற்பட்ட தரப்புகளே.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நீதியரசர் விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா – சிவாஜிலிங்கம் இணை, அனந்தி சசிதரன், ஐங்கரநேசன் என்று பலர் தலைமையில் பிரிவுகள், கட்சிகளாக இயங்கிக் கொண்டிருப்பவர்கள்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அப்பால் இப்போது தமிழ்த் தேசியம் தொடர்பில் அதிகம் செயலாற்றுபவர்கள்.

இவர்கள் அனைவருமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் அல்லது பிரிந்து சென்றவர்களே.

“இவர்கள் யாரையும் நாம் வெளியேற்றவில்லை. அவர்கள் தாமாகவே வெளியேறினர். அப்படி வெளியேறியவர்கள் திரும்பி வரலாம். அதற்கு எந்தத் தடையும் இல்லை. அப்படியிருக்கையில் புதிய கூட்டு, கட்டமைப்பு எதற்கு?” – என்று கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசு கேள்வி எழுப்புகின்றது.

கூட்டமைப்பின் தலைவரும், தமிழரசின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவருமான சம்பந்தனில் இருந்து கட்சிக்குள் மூத்த பிரமுகர்கள் பலரும் இவ்வாறுதான் கேட்கின்றனர்.

இந்தக் கேள்விக்கே ரெலோவின் பேச்சாளர் சுரேந்திரன் நல்ல பதில் விளக்கம் கொடுத்திருக்கின்றார். எனினும், அதற்குள் இறங்க முன்னர் ஒரு விடயம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து, கூட்டமைப்புத் தலைவர்கள் வெளியேற்றாமலேயே அதன் ஸ்தாபகர்களான சுரேஷ் பிறேமச்சந்திரன், ஸ்ரீகாந்தா மற்றும் முதலமைச்சராக இருந்த விக்னேஸ்வரன், எம்.பிக்களாக இருந்த சிவாஜிலிங்கம், கஜேந்திரகுமார், கஜேந்திரன் என்று தமிழ்த் தேசியம் பேசுவோர் பலர் வெளியேறியிருக்கின்றனரே, அவர்கள் வெளியேறுவதற்குக் காரணம் என்ன? இவ்வளவு பெரிய தலைகளும் தாங்களே தவறிழைத்து வெளியேறினார்களா? இப்படிப் பலர் வெளியேறிய பின்னர், அவர்களில் பலர் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவ அங்கீகாரமும் பெற்றுள்ளனர். அதனால் கூட்டமைப்பும் நலிவடைந்து செல்கின்றது என்பதும் உண்மை.

கூட்டமைப்புத் தலைவர்களோ மாறாமல் அந்தப் பதவிகளிலும் அதிகாரங்களிலும் தேங்கிக் கிடக்கின்றனர். ஆனால் காத்திரமான பலர் கூட்டமைப்பை விட்டு வெளியேறிவிட்டனர்.

அப்படி பலரும் வெளியேறக் காரணம் யாது என்று ஆய்ந்து, கண்டறிந்து, அந்த நிலைமையை ஒப்புக் கொண்டு, அதைத் திருத்துவதற்குக் காத்திரமான நடவடிக்கை எடுக்காமல், பிரிந்து போனவர்கள் திரும்பி வரலாம், கதவு திறந்திருக்கின்றது என்று கூட்டமைப்புத் தலைவர்கள் தாங்கள் அதிகாரத்தைப் பற்றிப் பிடித்தபடி கூறக் கூடாது. அப்படிக் கூறுவது தமிழினத்தை ஐக்கியப்படுத்தும் முயற்சிக்குக் குந்தகமானது. தாங்கள் கைகளில் மட்டுமே அதிகாரம் இருக்க வேண்டும் என்ற சுயநலத்தின்பால் பட்ட திமிர்த்தனப் போக்கு அது.

திறமையான, உண்மையான தேசியப் பற்றுள்ள, சுயநலமற்ற தலைவர்களையும், பிரமுகர்களையும் பிரிந்து போக விடாமல், ஐக்கியம் என்ற கயிற்றால் கட்டிப் பேணுவதுதான் தேசியத் தலைமைக்கு அழகு. போகின்றவர்கள் போகட்டும் என்று துரத்தி விட்டு, தாங்கள் கொஞ்சம் பேர் தலைவர்களாக – நிரந்தரத் தலைவர்களாக – பதவிகளிலும் அதிகாரத்திலும் தொடர்வதற்கு கூட்டமைப்பு என்ற பெயரைப் பயன்படுத்துவது நேர்த்தியே அல்ல.

இப்போது தாம் எடுக்கும் முயற்சி, உண்மையில் தமிழ்த் தரப்புகளை ஒரு பொதுத் தளத்தில் பணியாற்றுவதற்கான அழைப்பு மட்டுமே, அரசியல் கூட்டு அல்ல என்று ரெலோ பேச்சாளர் தெரிவித்திருக்கின்றார்.

“தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பொதுத் தளம் ஒன்றில் அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து பணியாற்றுவதை இலக்காகக் கொண்டு ஒருங்கிணைக்கும் பணியை ரெலோ முன்னெடுத்துள்ளதே தவிர, புதுக் கூட்டு ஏதும் அல்ல. ஆகவே, எந்தவொரு அரசியல் கட்சியினதும் கூட்டுக்களினதும் கட்டமைப்புக்களை மாற்ற வேண்டிய அவசியமில்லை.” என்று அவர் தெளிவுபடுத்தியுள்ளார்.

இத்தகைய அழைப்புக்கு தமிழ்க் கூட்டமைப்பு இணங்குவதில் இடைஞ்சல் ஏதும் இருக்க மாட்டாது என்று நம்புகிறோம்.

# சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசி டெல்டாவிலிருந்து பாதுகாக்கும்

## இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன உத்தரவாதம்



கொழும்பு, ஜூலை 12

சினோபோர்ம் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்கள் டெல்டா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாக்கப்படுகின்றனர் என இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்ததாக தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை குறித்த ஆய்வின் முடிவுகளை வெளியிடவுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் சினோபோர்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டவர்கள் டெல்டா வைரஸ் தொற்றில் இருந்து விஷேட பாதுகாப்பு வழங் குகின்றமை மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயம் என அவர் தெரிவித்துள்ளார்.

# 60 வயதுக்கு மேற்பட்டோருக்குத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை கண்டியில் ஆரம்பம்

கண்டி, ஜூலை 12

கண்டி – பன்விலை சுகாதார வைத்திய அதிகார பிரிவிற்கு உட்பட்ட 14 கிராமசேவகர் பிரிவுகளில் தடுப்பூசி செலுத்தும் பணிகள் இன்றும் (திங்கட்கிழமை) நாளையும் முன்னெடுக்கப்படவுள்ளன.

அதற்கமைய குறித்த பகுதியில் உள்ள 60 வயதிற்கு மேற்பட்ட மக்களுக்கு ஸ்புட்னிக் – வி தடுப்பூசிகள் செலுத்தப்படவுள்ளன.

பன்விலை இராஜசிங்க மத்திய கல்லூரி, உளுகங்கை கொஸ்கம சிங்கள பாடசாலை, கலாபொக்க அபிராமி தமிழ் மகா வித்தியாலயம் போன்ற மத்திய நிலையங்களில் இன்று காலைஆரம்பிக்கப்பட்டன என பன்விலை சுகாதார வைத்திய அதிகார பிரிவுக்கு பொறுப்பான அதிகாரி தெரிவித்துள்ளார்.

# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் திருகோணமலை மாவட்ட மக்களுக்கு உலருணவு



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தின் மொறவேவா பிரதேச செயலகத்திற்குட்பட்ட எல்லை கிராமங்களான பன்குளம், நொச்சிகுளம், ஔவைநகர், சாந்திபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது குடும்பமொன்றுக்கு சுமார் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான 150 பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை குறித்த கிராமங்களில் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.சசிக்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் மோகனதாஸ் சுவாமிகள், தென் கயிலை ஆதினத்தின் அகத்திய அடிகளார் மற்றும் மொறவேவா பிரதேச சபையின் தவிசாளர் டபிள்யூ.ஜெகத்குமார, உறுப்பினர் றாஜ மணி, சமூக ஆர்வலர் இ.தயாபரன் ஆகியோர் கலந்துகொண்டு பொதுமக்களுக்கான நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தனர்.

# சீரற்ற வானிலையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 13 ஆயிரத்து 519 ஆக அதிகரிப்பு

நாட்டில் கடந்த சில நாள்களாக நிலவும் சீரற்ற வானிலையால் 7 மாவட்டங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 432 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

தென்மேற்கு பருவப்பெயர்ச்சி காரணமாக கடந்த சில நாள்களாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில், அதிக மழையால் ஏற்பட்ட அனர்த்தங்கள் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 3 ஆயிரத்து 432 குடும்பங்களைச் சேர்ந்த 13 ஆயிரத்து 519 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அந்த நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

அவர்களில் 59 குடும்பங்களைச் சேர்ந்த 265 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# இந்தியாவில் இருந்து இறக்குமதியான தடுப்பூசியில் எய்ட்ஸ் கூறுகள் உள்ளன?

## மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் விளக்கம்



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தடுப்பூசியில் எய்ட்ஸ் கூறுகள் இருக்கின்றன என வெளியிடப்பட்டுள்ள செய்தி உண்மைக்குப் புறம்பானது என அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இது தடுப்பூசியுடன் தொடர்பான விடயம் அல்ல என்றும் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் பிரசன்ன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர் –

இந்த விடயம் பத்திரிகையொன்றில் தலைப்பு செய்தியாக வெளிவந்துள்ளது.

இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்தில் இவ்வாறான எய்ட்ஸ் கூறுகள் இருக்கின்றன எனச் சந்தேகிக்கப்பட்ட விடயம் தொடர்பிலேயே இந்த தலைப்பு செய்தி எழுதப்பட்டுள்ளது. தடுப்பூசிக்கும் இதற்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை.

தடுப்பூசி ஏற்றிக்கொள்வதில் பொது மக்களுக்குள்ள ஆர்வம் மற்றும் நம்பகத்தன்மை இதனால் சீர்குலைக்கப்படுகிறது. – என அவர் மேலும் தெரிவித்தார்.

# டெல்டா வைரஸில் இருந்தும் ஸ்புட்னிக் வி பாதுகாக்கும்

## ரஷ்யா தகவல்




இந்தியாவில் முதன்முதலாக காணப்பட்ட டெல்டா வைரஸ், இப்போது உலக நாடுகளில் எல்லாம் பரவிவிட்டது. இந்த வைரஸ் வேகமாகப் பரவுகிற தன்மையைக் கொண்டுள்ளது.

இந்நிலையில், இந்த வைரஸுக்கு எதிரான பாதுகாப்பை ஸ்புட்னிக்–வி போன்ற 'மெசேஞ்சர் ஆர்.என்.ஏ.' தடுப்பூசிகள் கொண்டுள்ளன என்று ரஷ்யாவின் நோவாசிபிர்ஸ்க் மாகாண பல்கலைக்கழகத்தின் ஆய்வக தலைவரும், ரஷ்ய அறிவியல்கள் அகாடமியின் உறுப்பினருமான செர்ஜி நெடேசோவ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் குறிப்பிடுகையில், இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் பிற நாடுகளில் இருந்து வருகிற தரவுகள், டெல்டா வைரஸுக்கு எதிராக ஸ்புட்னிக்–வி போன்ற மெசேஞ்சர் ஆர்.என்.ஏ. தடுப்பூசிகள் 90 சதவீத பாதுகாப்பு இருப்பதை காட்டுகின்றன. ஏற்கனவே உருவாக்கிய தடுப்பூசிகள் பாதுகாப்பானவை என்பதால் அவற்றை பயன்படுத்தலாம் என தெரிவித்தார்.

கமலேயா ஆராய்ச்சி மையத்தின் மக்கள் தொகை மாறுபாடு பொறிமுறைகள் ஆய்வுக்கூடத்தின் தலைவர் விளாடிமிர் குஷ்சின் கூறுகையில், டெல்டா வைரஸால் ஏற்படுகிற கொரோனாவின் கடுமையான மற்றும் அபாயகரமான நிகழ்வுகளுக்கு எதிராக கிட்டத்தட்ட 100 சதவீத பாதுகாப்பை ஸ்புட்னிக்–வி தடுப்பூசி உறுதி செய்கிறது என தெரிவித்துள்ளார்.

# மியாமி கட்டட விபத்தின் மரண எண்ணிக்கை 90 ஆக அதிகரிப்பு



அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் மியாமி கடற்கரை அருகே 12 மாடிகளை கொண்ட குடியிருப்பு வளாகம் ஒன்று கடந்த ஜூன் 25 ஆம் திகதி இடிந்து விழுந்தது.

12 மாடி குடியிருப்பு கட்டடம் திடீரென இடிந்து விழுந்ததில் 150 இற்கும் மேற்பட்டோர் சிக்கியுள்ளனர் என முதல் கட்ட தகவல் வெளியானது. இந்நிலையில், மியாமியில் அடுக்கு மாடி கட்டடம் இடிந்து விழுந்து ஏற்பட்ட விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது.

இதுதொடர்பாக மாயமானவர்களின் குடும்பத்தினரிடம் மியாமி–டேட் நகர மேயா டேனியலா லெவைன் காவா கூறியதாவது:

அடுக்குமாடி கட்டடம் இடிந்து விழுந்த பகுதியிலிருந்து மேலும் சில உடல்கள் மீட்கப்பட்டமையைத்தொடர்ந்து, விபத்தில் 90 பேர் உயிரிழந்தமை அதிகாரபூர்வமாக உறுதியாகியுள்ளது. இந்த எண்ணிக்கை மிகவும் வேதனை அளிக்கக் கூடியது.

இடிபாடுகளில் சிக்கியுள்ள உடல்களை மீட்பதற்கான பணிகளை அவசரமாக மேற்கொள்ள மீட்புக் குழுவினருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

# சூரியனில் வீசும் புயலால் தொலைத்தொடர்பு பாதிப்பு?

*சூரியனில் வீசும் புயலால் பூமியில் தொலைத் தொடர்பு பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். சூரியனின் கோள உச்சத்தில் பூமியை நோக்கி வீசும் புயல் மணிக்கு 16 லட்சம் கிலோ மீற்றர் வேகத்தில் இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது.*

*அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசாவின் கூற்றுப்படி, இன்று பூமியை நெருங்கும் சூரியப் புயல் பூமியின் வெளிப்புற வளிமண்டலத்தை வெப்பமாக்கும் என்று தெரிவித்துள்ளது.*

*இதனால் செயற்கைக் கோள் இயக்கத்திலும் பாதிப்பு இருக்கும் என்று கூறப்படுகிறது. மேலும் ஜிபிஎஸ், செல்போன் சிக்னல், செயற்கைக் கோள் தொலைக்காட்சியில் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என தெரிவித்துள்ளது.*

*இருப்பினும், பூமியின் காந்தப்புலம் ஒரு பாதுகாப்பு கவசமாக செயல்படுவதால் இது மிகவும் அரிதாகவே நிகழ்கிறது என்று நாசா தெரிவித்துள்ளது.*





# ஹைற்றி அதிபர் கொலை; மேலும் ஒருவர் கைதானார்

ஹைற்றி அதிபர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த 7ஆம் திகதி ஹைதி அதிபர் ஜோவனல் மோயிஸ் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் 17 பேர் கைது செய்யப்பட்ட நிலையில், 3 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த நிலையில் வழக்கில் சம்பந்தப்பட்ட மேலும் ஒரு நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். தனி விமானம் மூலம் ஹைதிக்குள் நுழைந்த நபர் Christian Emmanuel Sanon என்று அடையாளம் காணப்பட்டுள்ளார் எனவும், அதிபர் கொலை சம்பவத்தில் மூளையாக செயல்பட்டு இருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

Christian Emmanuel Sanon வீட்டில் இருந்து அமெரிக்க போதைப்பொருள் அமுலாக்க பிரிவின் சின்னம் பொறித்த தொப்பி, துப்பாக்கி, தோட்டாக்கள் போன்றவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.



# தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு

சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வீட்டிற்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்றுச் சென்று அவரது உடல் நலம் குறித்து விசாரித்தார்.

இந்தச் சந்திப்பின் போது கொரோனாப் பேரிடர் நிவாரண நிதியாக 10 லட்சம் ரூபாவுக்கான காசோலையை முதலமைச்சரிடம் விஜயகாந்த் வழங்கியிருக்கிறார்.

இந்தச் சந்திப்பின்போது நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், தி.மு.க. எம்.பி. ஆ.ராசா, தே.மு.தி.க. பொருளாளர் பிரேமலதா, விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தமிழ்நாட்டில் நடந்து முடிந்த சட்ட மன்றத் தேர்தலில், அ.தி.மு.கவுடனான கூட்டணியை முறித்துக் கொண்ட தே.மு.தி.க., அ.ம.மு.கவுடன் இணைந்து போட்டியிட்டது. ஆனாலும், ஒரு தொகுதியில் கூட தே.மு.தி.க. வேட்பாளர்கள் வெற்றி பெற்றிருக்கவில்லை. தேர்தலுக்குப் பின்னர் தே.மு.தி.கவுடன் தி.மு.க. நட்புறவைத் தொடர்ந்து வருகிறது.

முதலமைச்சராக மே 7 ஆம் திகதி மு.க.ஸ்டாலின் பதவியேற்ற பிறகு, தே.மு.தி.க. துணைப் பொதுச்செயலாளர் எல்.கே. சுதீஷ், விஜயகாந்தின் மகன் விஜய பிரபாகரன் ஆகியோர் முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்து வாழ்த்துத் தெரிவித்திருந்தனர். சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்ற பின், விஜயகாந்தை நேரில் சந்தித்து உதயநிதி ஸ்டாலின் ஆசி பெற்றிருந்தார்.

தமிழக உள்ளாட்சித் தேர்தல் நெருங்கும் நிலையில் இந்த சந்திப்பு முக்கியத்துவம் பெற்றுள்ளது.

# 'அரசியலுக்கு இனி வரவே மாட்டேன்' நடிகர் ரஜினிகாந்த் அறிவிப்பு

## மக்கள் மன்றம் ரசிகர் மன்றமாகவே செயற்படும்



வருங்காலத்தில் அரசியலில் ஈடுபடும் எண்ணம் எனக்கில்லை. ஆகையால் ரஜினி மக்கள் மன்றத்தைக் கலைத்துவிட்டு, முன்புபோல ரஜினிகாந்த் ரசிகர் மன்றமாக செயல்பட முடிவு செய்துள்ளேன் என நடிகர் ரஜினிகாந்த தெரிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் மக்கள் மன்ற நிர்வாகிகளைச் சந்திப்பதாக அறிவிப்புகள் வெளியாகிய நிலையில், அதற்கு முன்னதாக தனது போயஸ் கார்டன் இல்லத்தின் வாயிலில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த ரஜினிகாந்த், நான் எனது அரசியல் பிரவேசம் தொடர்பாக அறிவித்த பிறகு மக்கள் மன்ற நிர்வாகிகளைச் சந்திக்க முடியவில்லை. காரணம், அண்ணாத்த படப்பிடிப்பு முடிவதில் தாமதமாகி விட்டது. உடல்நிலை தொடர்பாக பரிசோதிப்பதற்காக அமெரிக்காவுக்கும் சென்று வந்தேன்.

மக்கள் மன்றத்தைத் தொடரலாமா? தொடர்ந்தால் என்ன பணிகள்? நானும் எதிர்காலத்தில் அரசியலுக்கு வரப்போறேனா? இல்லையா? என்று மக்கள் மன்ற நிர்வாகிகள் மத்தியிலும் ரசிகர்கள் மத்தியிலும் நிறையக் கேள்விகள் இருக்கின்றன. இது குறித்து மக்கள் மன்ற நிர்வாகிகளுடன் ஆலோசிக்க உள்ளேன் என்று தெரிவித்திருந்தார். 'எதிர்காலத்தில் நான் அரசியலுக்கு வருவேனா என்ற கேள்வி இருக்கிறது. அது குறித்து மன்ற நிர்வாகிகளுடன் ஆலோசித்து முடிவைச் சொல்வேன்' என்றும் அவர் கூறியிருந்தார்.

இதனையடுத்து கோடம்பாக்கத்தில் தனது மக்கள் மன்ற நிர்வாகிகளைச் சந்தித்து அவர் பேசினார். அதன்பின்னர், வருங்காலத்தில் அரசியலில் ஈடுபடும் எண்ணம் தனக்கில்லை என்றும் ஆகையால், ரஜினி மக்கள் மன்றத்தைக் கலைத்துவிட்டு, முன்புபோல ரஜினிகாந்த் ரசிகர் மன்றமாக செயல்பட முடிவு செய்துள்ளதாகவும் அறிக்கை யொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், நான் அரசியலுக்கு வரமுடியவில்லை என்று சொன்ன பிறகு ரஜினி மக்கள் மன்றத்தின் பணி என்ன? நிலை என்ன? என்று மக்கள் மன்ற நிர்வாகிகள் மற்றும் ரசிகர்கள் மத்தியில் கேள்விகள் இருக்கின்றன. அவற்றை விளக்க வேண்டியது என்னுடைய கடமை. நான் அரசியல் கட்சி ஆரம்பித்து, அரசியலில் ஈடுபடுவதற்காக ரஜினிகாந்த ரசிகர் நற்பணி மன்றத்தை ரஜினி மக்கள் மன்றமாக மாற்றி, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பல பதவிகளையும் பல சார்பு அணிகளையும் உருவாக்கினோம்.

காலச் சூழலால் நாம் நினைத்தது சாத்தியப்படவில்லை. வருங்காலத்தில் அரசியலில் ஈடுபடும் எண்ணம் எனக்கில்லை. ஆகையால் ரஜினி மக்கள் மன்றத்தைக் கலைத்துவிட்டு, சார்பு அணிகள் எதுவுமின்றி இப்போதைக்கு ரஜினி மக்கள் மன்றத்தில் உள்ள செயலாளர்கள், இணை, துணைச் செயலாளர்கள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுடன் மக்கள் நலப்பணிக்காக முன்புபோல ரஜினிகாந்த் ரசிகர் மன்றமாகவே எமது அமைப்பு செயல்படும்' என்று கூறப்பட்டுள்ளது.

## உத்தரப்பிரதேச ஊரக உள்ளாட்சித் தேர்தலில்

# பா.ஜ.க. கூட்டணிக்கு பெரும் வெற்றி

உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடைபெற்ற ஊரக உள்ளாட்சித் தேர்தலில் மீண்டும் ஒரு பெரிய வெற்றியை பெற்றிருக்கிறது பாரதிய ஜனதாக் கூட்டணி.

உத்தரப்பிரதேசத்தில் உள்ளாட்சித் தேர்தல் சில கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புற, மாவட்ட உள்ளாட்சித் தேர்தல்கள் ஏற்கனவே நடத்தப்பட்ட நிலையில் கடந்த சனிக்கிழமை ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது.

இதில் மொத்தம் உள்ள 725 இடங்களில் 635 இடங்களை பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது. சில இடங்களை பா.ஜ.கவின் கூட்டணிக் கட்சிகள் கைப்பற்றியுள்ளன. இந்தத் தேர்தலில் அகிலேஷ் யாதவின் சமாஜ்வாதிக் கட்சி மிகவும் பின்தங்கியிருக்கிறது.



உத்தரப்பிரதேசத்தில் அடுத்த ஆண்டில் சட்டமன்றத் தேர்தல் நடை பெறவிருக்கும் நிலையில் ஆளும் பா.ஜ.கவுக்குக் கிடைத்திருக்கும் அண்மைய வெற்றி அவர்களுக்குப் பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது.

தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர் உத்தரப்பிரதேசத்தின் 17 மாவட்டங்களில் வன்முறைச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன என தகவல்கள் வெளியாகியுள் ளன. தேர்தலில் போட்டியிடவிடாமல் வேட்புமனுத் தாக்கல் செய்ய வந்தவர்களை பா.ஜ.கவினர் தடுத்தனர் என எதிர்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளில் பா.ஜ.கவின் வெற்றிக்காக, அம்மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத்தை இந்தியப் பிரதமர் மோடி பாராட்டியிருக்கிறார்.

முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் கூறுகையில், தேர்தல் முடிவுகள் பெரும்பான்மையான பொதுமக்கள் பா.ஜ.கவுக்கு ஆதரவாக இருப்பதைக் காட்டுவதாகவும், இதற்கு ஆளும் அரசாங்கத்தினதும் மத்திய அரசினதும் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வெற்றிகரமாக அமுல்படுத்தியதே காரணமாகும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

# இந்தியாவில் தினசரி கொரோனாப் பாதிப்பு 40 ஆயிரத்தை விடக் குறைந்தது

இந்தியாவில் கொரோனா பாதிப்பின் இரண்டாவது அலை மெல்ல மெல்ல கட்டுக்குள் வரத்தொடங்கியுள்ளதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 'நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 37 ஆயிரத்து 154 பேர் கொரோனா பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர்.



இதனால் மொத்த கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை 3 கோடியே 8 லட்சத்து 74 ஆயிரத்து376 ஆக உள்ளது.

கொரோனாப் பாதிப்பால் ஒரே நாளில் 724 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால், மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 4,08,764 ஆக உயர்ந்து உள்ளது. தற்போதைய உயிரிழப்பு 1.32 சதவீதமாக உள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 39,649 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதனால் மொத்த குணமடைந்தோர் எண்ணிக்கை 3 கோடியே 14 ஆயிரத்து 713 ஆக உயர்வடைந்துள்ளது.

இதன்மூலம் குணமடைவோர் தொகை 97.20 சதவீதமாக உள்ளது. நாடு முழுவதும் கொரோனாப் பாதிப்புக் காரணமாக தற்போது வரை 4,50,899 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 1.47 சதவீதமாக உள்ளது.

இந்தியாவில் இதுவரை செலுத்தப்பட்ட கொரோனாத் தடுப்பூசிகளின் எண்ணிக்கை 37 கோடியே 73 லட்சத்து 52 ஆயிரத்து 501 ஆகும்' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 6 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் சிவப்பு வலயங்களாக அடையாளம்



மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் தொடர்ந்தும் சிவப்பு வலயங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன என மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் ஆகக்கூடிய மரணமாக இதுவரை 100 மரணங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளன.

அதேபோன்று கடந்த 24 மணித்தியாலயங்களில் காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 22 பேரும், மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து 24 பேரும், வெல்லாவெளி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 9 பேரும், செங்கலடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 3 பேரும், சிறைச்சாலைக் கைதிகள் 3 பேரும், கோறளைப்பற்று மத்தி, பட்டிப்பளை, ஏறாவூர் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் தலா ஒருவர் வீதம் 3 பேர் உட்பட 64 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், மாவட்டத்தில் இதுவரை 7,199 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையுடன் 100 பேர் மரணமடைந்துள்ளனர்.

கொரோனா 3ஆவது அலையில் 6,214 தொற்றாளர்கள் கண்டறியப்பட்டமையுடன் 91 பேர் மரணித்துள்ளனர். கொரோனா சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் இருந்து 4,995 பேர் குணமடைந்து வீடுகளுக்கு திரும்பியுள்ளதுடன் தொடர்ந்தும் 1,060 பேர் வைத்தியசாலைகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

மாவட்டத்தில், கரடியனாறு, வாகரை, நாவற்காடு, பெரியகல்லாறு போன்ற வைத்தியசாலைகள் கொரோனா இடைத்தங்கல் முகாம்களாக அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், காத்தான்குடி, வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி ஆகிய வைத்தியசாலைகள் சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளாக மாற்றப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதுடன், மாவட்டத்தில் 700 நோயாளர்களைப் பராமரிக்கக் கூடிய கட்டில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, காத்தான்குடி, ஏறாவூர், கோறளைப்பற்று மத்தி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி ஆகிய 6 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் தொடர்ந்தும் சிவப்பு வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

முதற்கட்டமாக வழங்கப்பட்ட 3 ஆயிரம் தடுப்பூசிகள் சுகாதாரத்துறையினருக்கு ஏற்றப்பட்டன. தொடர்ந்து இரண்டாம் கட்டமாக கிடைக்கப்பெற்ற 25 ஆயிரம் தடுப்பூசிகள், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் ஏற்றப்பட்டன.

3ஆவது கட்டமாக தற்போது 50 ஆயிரம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதுவரையில் 30 ஆயிரத்து 176 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன. இரண்டாம் தடுப்பூசி 5 ஆயிரம் பேருக்கு ஏற்றப்பட்டுள்ளதுடன், சுகாதார அமைச்சின் பரிந்துரைக்கமைய மாவட்டத்திலுள்ள 12,000 ஆசிரியர்களுக்கு தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மாகாண சுகாதார திணைக்களத்தினாலும் நன்கொடைகளாலும் ஒட்சிசன் சிலிண்டர்கள் கிடைக்கப் பெற்றமையையடுத்து தேவையான அளவு ஒட்சிசன் இருப்பில் இருக்கின்றது.

சுகாதார அமைச்சினால் கட்டுப்பாடுகள் சில தளர்த்தப்பட்டபோதும் மக்கள் தேவையற்று வெளியில் வராமல் ஒன்றுகூடல்களை தவிர்த்து சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிப்பதன் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்று மேலும் பரவாமல் தடுத்துக் கொள்ளலாம் என அவர் தெரிவித்தார்.

## வாழைக்காலை பிரதேசத்தில் சட்ட விரோத மண் அகழ்வு

வெல்லாவெளி பொலிஸ்பிரிவிற்குட்பட்ட வாழைக்காலை பிரதேசத்தில் நீண்ட நாள்களாக சட்ட விரோத மண் அகழ்வில் ஈடுபட்டு வந்த நபர்களை சுற்றிவளைத்த போது புல்டோசர் ஒன்று மீட்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் புல்டோசர்களைக்கொண்டு நீண்டகாலமாக ஆற்றுப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் மண் அகழ்வினை மேற்கொண்டு விற்பனையில் ஈடுபட்டுவருகின்றனர் என பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் பணிப்பு ரைக் கமை வாக வெல்லாவெளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆனந்தசிறி தலைமையிலான பொலிஸ் குழுவினரே இந்த நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளனர்.

இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது மண் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும் அவர்கள் மண் அகழ்விற்கு பயன்படுத்திய புல்டோசர் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இந்தப்பிரதேசத்தில் தொடர்ந்து சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்டு வருவதனால் அப்பிரதேசத்தில் உள்ள வயல் நிலங்கள், மக்களின் போக்குவரத்திற்கு பயன்படுத்தும் வீதிகள் நாளுக்கு நாள் சேதமடைந்து வருகின்றன என பிரதேசவாசிகள் விசனம் தெரிவித்துள்ளனர். மீட்கப்பட்ட புல்டோசர் நீதிவான் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# தடுப்பூசி வழங்கல் முன்னுரிமைப் பட்டியலில் வர்த்தகர்கள் உள்வாங்கப்பட வேண்டும்

## வர்த்தக சங்கம் கோரிக்கை



கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளின் போது வர்த்தகர்களுக்கும், வர்த்தக நிலையங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும் என சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கம் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

எதிர்வரும் ஹஜ்ஜுப்பெருநாள் பருவகாலத்தில் வர்த்தக நிலையங்கள் எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் என அறிவுறுத்தும் கலந்துரையாடல் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அல்-அமீன் ரிசார்ட் தலைமையில், சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டு அதற்கான கடிதமும் ஒப்படைக்கப்பட்டது. இதில் சாய்ந்தமருது-மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம். எம். முபாரக், செயலாளர் எம்.எப்.ஏ. பாஸித், பொருளாளர் எம்.எம்.ஏ. ரஹீம் உள்ளிட்ட வர்த்தக சங்க உறுப்பினர்கள், வர்த்தகர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் கலந்து கொண்டனர். அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது.

எதிர்வரும் வாரங்களில் எமது சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரிவுக்குள் கொரோனாத் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க இருப்பதாக அறியமுடிகின்றது.

அதிலும் குறிப்பாக ஆசிரியர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்களை முன்னரங்க பணியாளர்களாக கருதி அவர்களுக்கு முன்னுரிமை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் அறியமுடிகின்றது.

இங்கு, வர்த்தகர்கள் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று பொருள்கள் கொள்வனவு செய்பவர்களாகவும், வர்த்தக நிலையங்களில் வெளிநாட்டு மற்றும் பல பகுதிகளைச் சேர்ந்த உள்நாட்டு வாடிக்கையாளர்களுடன் வர்த்தகங்களில் ஈடுபட்டும் வருகின்றனர்.

இவர்களும் மற்றும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்களும் தினமும் கொரோனா அச்சுறுத்தலை எதிர்நோக்கியவர்களாகவே உள்ளனர். எனவே, இவர்களையும் முன்னரங்க பணியாளர்களாக கருதி தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளில் முன்னுரிமை வழங்குமாறு சாய்ந்தமருது - மாளிகைக்காடு வர்த்தக சங்கம் தங்களை அன்பாக கேட்டுக்கொள்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசாங்கம் இன, மத வேறுபாடு காட்டுவதில்லை ஓட்டமாவடியில் நீதி அமைச்சர் அலி சப்றி கருத்து



அரசாங்கத்தின் வேலைத் திட்டம் எந்தவித இன, மத, பேதமின்றியும் பிரதேச பாகுபாடின்றியும் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது என்று நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.

ஓட்டமாவடியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விசேடமாக நாங்கள் நூறு கிலோமீற்றர் வீதி வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். அதேபோன்று கிராம சேவகர் பிரிவுகளில் வீடுகளை அமைத்துக்கொடுத்துள்ளோம். அத்தோடு ஆயிரம் தேசியப் பாடசாலைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்த அரசாங்கம் கொரோனாவைக் காரணம் காட்டி அபிவிருத்திப் பணிகளை நிறுத்தவில்லை. கிட்டத்தட்ட 50 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் நாட்டுக்கு வந்துள்ளன. இன்னும் 50 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள் வரவுள்ளன. இந்த வருடத்துக்குள் இலங்கையிலுள்ள அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவின் பைஸர் தடுப்பூசி நாட்டுக்கு கிடைத்துள்ளது. அதை நாங்கள் வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பியுள்ளோம்.

இந்தியாவில் இருந்து படகுகளில் வருவோர் மூலம் டெல்டா வைரஸ் தாக்கும் என்பதால் அப்பகுதி மக்களின் நலன்கருதி முதலில் அந்த தடுப்பூசிகளை வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பியுள்ளோம்.

இலங்கை மக்களை பாதுகாக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முஸ்லிம், சிங்களம், தமிழ் என்று பார்ப்பது கிடையாது. அவர் இந்த நாட்டு மக்கள் என்று எண்ணியே பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

இந்தநாட்டை ஜானாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் ஒரு நல்ல திட்டத்தோடு இலங்கையை கட்டியெழுப்புவார்கள். அதில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். ஒருபோதும் கொரோனாவைக் காரணம் காட்டி இந்த நாட்டின் அபிவிருத்திப் பணிகள் நிற்கப்போவதில்லை என்றார்.

# அம்பாறையில் நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த கிராம சேவகர்கள் பிரிவுகள் தனிமைப்படுத்தலில்

நாட்டில் நிலவும் கொரோனாத் தொற்று அச்ச நிலை காரணமாக மேலும் 4 மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேகவர் பிரிவுகள் உடனமுலாகும் வகையில் இன்று அதிகாலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதனடிப்படையில் அம்பாறை, கண்டி, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலுள்ள ஐந்து கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையில் நுவரெலியா மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 2 கிராம சேவகர் பிரிவுகள் இன்று அதிகாலை தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# யூரோ கிண்ணத்தை வென்றது இத்தாலி!

வெம்ப்ளியில் நடைபெற்ற யூரோ கிண்ணக் கால் பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் இத்தாலி அணி, பெனால்டி ஷூட் அவுட்டில் இங்கிலாந்தை 3-2 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியது.

ஆட்டத்தில் முதல் பாதியில் இங்கிலாந்து அணி ஒரு கோலுடன் முன்னிலை வகித்தது. அதில் இங்கிலாந்து அணி வீரர் லூக்ஷாவின் கோல் போட்டி ஆரம்பித்து 1 நிமிடம் 57 ஆவது வினாடியில் அடிக்கப்பட்டது. இது யூரோ சம்பியன்ஷிப்பின் இறுதிப் போட்டியில் அடிக் கப்பட்ட வேகமான கோல் ஆகும். அரையிறுதி நேர முடிவின்போது 1-0 என்று இங்கிலாந்து முன்னிலை வகித்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் 67 ஆவது நிமிடத்தில் இத்தாலி அணி வீரர் லியோனர்டோ பொனுக்சி கோல் ஒன்றை அடித்து ஆட்டத்தை 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலைக்குக் கொண்டுவந்தார். அதன் பின்னர் இரு அணிகளும் கோல் அடிக்க எடுத்துக் கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை.

மேலதிக நேரத்திலும் போட்டி 1-1 என்று சமநிலை யிலேயே தொடர்ந்ததால், பெனால்ட்டி ஷூட் அவுட் முறையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டி ஏற்பட்டது. அதில் இத்தாலி அணி 3 கோல்களும், இங்கிலாந்து அணி 2 கோல்களும் அடித்தன. இதனடிப்படையில் இத்தாலி அணி வெற்றி பெற்று இரண்டாவது முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது.

நான்கு முறை உலகச் சம்பியனான இத்தாலி அணி இதற்கு முன்பு ஒரேயொரு முறை 1968 இல் யூரோ கிண்ணத்தை வென்றுள்ளது. களத்தில் அதிரடியான தாக்குதல் பாணியைக் கையாளும் அந்த அணி இந்தத் தொடரில் மட்டும் 12 கோல்களை அடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


# ஒலிம்பிக் தீபம் டோக்கியோவை வந்தடைந்தது



ஒலிம்பிக்கின் பிறப்பிடமான கிரீஸ் நாட்டில் உள்ள ஒலிம்பியா நகரில் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டு, அது பல நாடுகளைக் கடந்து போட்டித்தொடரின் நாட்டை வந்தடையும். முதல் நாளில் நடைபெறும் கோலாகல ஆரம்ப விழாவின்போது அந்த நாட்டின் ஒலிம்பிக் மைதானத்தில் ஏற்றி வைக்கப்பட்டு, போட்டிகள் முடிவடையும்வரை அணையாமல் பாதுகாக்கப்படு வது பாரம்பரிய நடைமுறையாகும்.

அதன்படி கடந்த ஆண்டு மார்ச் மாதம் கிரீசில் இருந்து ஒலிம்பிக் தீபம் ஜப்பானை வந்தடைந்தது. கொரோனா காரணமாக போட்டிகள் தள்ளிப்போனமை யால் ஓர் ஆண்டுக்கும் மேலாக பத்திரமாகப் பாதுகாக் கப்பட்ட ஒலிம்பிக் தீபம் கடந்த 25 ஆம் திகதி புகுஷிமா மாகாணத்தில் இருந்து தொடர் ஓட்டப் பயணத்தை ஆரம்பித்தது. அங்குள்ள 46 மாகாணங்கள் வழியாக எடுத்து வரப்பட்ட ஒலிம்பிக் தீபம் இரு தினங்களுக்கு முன்னர் டோக்கியோவை வந்தடைந்தது.

இதையொட்டி அங்குள்ள விளையாட்டரங்கில் நடந்த விழாவில், ஆளுநர் யுரிகோ கோய்கி உள்ளிட்ட போட்டி அமைப்பாளர்கள் கலந்து கொண்டு ஒலிம்பிக் தீபத்தை வரவேற்றனர். ஒலிம்பிக் தீபத்தின் வரவேற்பு விழா நடைபெற்ற மைதானத்தின் அருகிலும், 'கொரோனாப் பரவல் இருக்கும் இந்தச் சமயத்தில் ஒலிம்பிக் போட்டியை நடத்துவதா?' போன்ற கோஷங்களோடு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டமும் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை ஆறாவது தடவையாக வென்றார் ஜோகோவிச்

விம்பிள்டன் ஓபின் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒன்றையர் பிரிவில் உலகின் முதல்நிலை வீரரான செர்பியா வின் நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டத்தை வென்றுள் ளார்.

இறுதிப் போட்டியில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சும் இத்தாலியின் மட்டியோ பெரெட்டினியும் மோதியிருந்தனர். விறுவிறுப்புக்குப் பஞ்சமில்லாமல் நடைபெற்ற இந்தப்போட் டியில், பெரெட்டினி முதல் செட்டில் ஜோகோவிச்சுக்கு கடும் சவாலை அளித்தார். இதனால் செட்டை-பிரேக் வரை நகர்ந் தது. இதில் 6-7 என போராடி பெரெட்டினி முதல் செட்டைக் கைப்பற்றினார்.

இரண்டாவது செட்டை 6-4 எனக் கைப்பற்றி ஜோகோவிச் பதிலடி கொடுத்தார். விடாது ஆக்ரோஷமாக விளையாடிய அவர், 6-4, 6-3 என அடுத்தடுத்து செட்களைக் கைப்பற்றி சம்பியன் பட்டத்தையும் வென்றார்.

3 மணித்தியாலங்களும் 24 நிமிடங்களும் நடந்த இந்த இறுதிப் போட்டியில் வெற்றிபெற்றதன் மூலம் நோவக் ஜோகோவிச் தனது 20 ஆவது கிராண்ட்ஸ்லாம் மற்றும் ஆறாவது விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வசப்படுத் திக்கொண்டார்.

20 கிராண்ட்ஸ்லாம் சம்பியன் பட்டங்களை வென்ற மூன்றாவது வீரர் என்ற பெருமையையும் ஜோகோவிச் பெற்றார். இந்தச் சாதனையை சுவிட்ஸர்லாந்தின் ரோஜர் பெடரர் 2018 ஆம் ஆண்டும் ஸ்பெயினின் ரபேல் நடால் 2020 ஆம் ஆண்டும் இந்தச் சாதனையைப் புரிந்துள்ளனர்.

இதுவரை 20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள், 5 ஏ.டி.பி. பட்டங்கள், 36 மாஸ்டர்ஸ் சம்பியன் பட்டங்கள் என மொத்த மாக 61 சம்பியன் பட்டங்களை ஜோகோவிச் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கோபா அமெரிக்கா தங்கக் காலணி விருதைத் தட்டிச்சென்ற மெஸ்ஸி



கோபா அமெரிக்கா கால்பந்தாட்டத் தொடரில் அதிக கோல்கள் அடித்த வீரருக்கு வழங்கப்படும் தங்கக் காலணி விருது ஆர்ஜென்டீனா அணி யின் கப்டன் மெஸ்ஸிக்குக் கிடைத்தது. இதற்கான விருதுச் சின்னமான சில்வர் பந்து அவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

ஏழு போட்டிகளில் விளையாடிய மெஸ்ஸி நான்கு கோல்களை பதிவு செய்து இந்த விருதை முதல் முறையாகப் பெற்றிருக்கிறார். இவர், இந்தத் தொடரில் ஐந்து முறை கோல் அடிப்பதற் காகப் பந்தினை சரியான முறையில் பாஸ் செய்து உதவி செய்துள்ளார். ஆர்ஜென்டீனா அணிக்காக முதல் முறையாகக் கிண்ணத்தை அணித்தலை வராக வென்று கொடுத்த மெஸ்ஸிக்கு தொடரின் சிறந்த வீரருக்கான தங்கப் பந்து விருதும் கிடைத் திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் மகளிர் இறுதி

# அஷ்லெ பார்டி சம்பியனானார்

விம்பிள்டன் ஓபின் டென்னிஸ் தொடரின் பெண்க ளுக்கான ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் முதல்நிலை வீராங்கனையான ஆஸ்திரேலியாவின் அஷ்லெ பார்டி வெற்றிபெற்றிருக்கிறார். இதன் மூலம் விம்பிள்டன் சம்பியன் பட்டத்தை வென்ற இரண்டாவது ஆஸ்திரேலிய வீராங்கனை என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்த இறுதிப் போட்டியில் செக்.குடியரசின் கரோலினா பிளிஸ்கோவாவை அஷ்லெ பார்டி எதிர்கொண்டார். முதல் செட்டை 6-3 என அஷ்லெ பார்டி கைப்பற்ற, டை பிரேக் வரை நீண்ட இரண்டாவது செட்டை 7-6 என பிளிஸ்கோவா வென்றார்.

வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செட்டை 6-3 எனக் கைப்பற்றிய அஷ்லெ பார்டி சம்பியன் பட்டத்தை வென்றிருக்கிறார்.




காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஓர் இலக்கிய ஆளுமையின் வாழ்வும் பணிகளும்

## எழுத்தாளர் – ஊடகவியலாளர் – சமூகச்செயற்பாட்டாளர்

### முருகபூபதிக்கு நாளை ஜுலை 13 இல் எழுபது வயது




- கிறிஸ்ரி நல்லரெத்தினம் -
(மெல்பன்)

இற்றைக்கு எழுபது ஆண்டுகளுக்கு முன்னர், 1951 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 13 ஆம் திகதி, காலைப்பொழுதில் நுரை தள்ளி கரை நனைக்கும் அலையோசையைத் தவிர எங்கும் அமைதி. நீர்கொழும்பு கடற்கரை வீதியில் அமைந்த அந்தத் தொடர் குடியிருப்பில் ஒரு சிறிய வீட்டில் ஒரு ஆண்குழந்தை வெளியுலகை எட்டிப்பார்த்தது, தாயின் கர்ப்பத்தின் சூடு தணிந்து கடற்காற்றின் குளிர்மை தழுவியதால் 'வீல், வீல்' என்று அலறுகிறது.

அதன் அழுகுரலோடு அருகே அமைந்த கோயில்களிலிருந்தும் புனித செபஸ்தியார் தேவாலயத்திலிருந்தும் மணியோசை கேட்கிறது.

அந்தக் குழந்தையைப் பெற்ற தாயின் தந்தையான தாத்தா, பேரன் பிறந்துவிட்டான் என்பதை பறைசாற்ற, வீட்டின் கூரையில் ஏறித் தட்டும் அதிசயமும் நடக்கிறது.

அது அவரது குடும்பப் பின்னணியின் மரபார்ந்த பண்பாட்டுக்கோலம். அந்த ஒலி அயல்வீடுகளுக்கும் கேட்கிறது.

அன்று அந்த வீட்டில் பிறந்த குழந்தையின் குரல் பின்னாளில் உலகெங்கும் கேட்கும் என்றோ, அதன் தாத்தா கூரையைத்தட்டி எழுப்பிய பேரோசை போன்று தாயகம் கடந்தும் செல்லும் என்றோ, அந்தத் தாத்தா உட்பட அதனது பெற்றோரும் உற்றார் உறவினரும் அப்போது உணர்ந்திருக்கமாட்டார்கள்!

ஆனால், அதுதான் 70 வயதை அக்குழந்தை அண்மிக்கும்போது சாத்தியமானது என்பதை கடந்த 09 ஆம் திகதி சமகால கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் நடந்த இணையவெளி காணொலி அரங்கின் ஊடாக நாம் அறிந்தபோது, அக்காட்சியை காண்பதற்கு இன்று இலக்கிய ஆளுமையாக வளர்ந்துள்ள அன்றைய அக்குழந்தையின் பெற்றோரோ, தாத்தா – பாட்டியோ இந்த உலகில் இல்லை.

ஆனால், அவர்களையும் நினைவுகூர்ந்து, அவர்களால் புடமிட்டு வளர்க்கப்பட்ட ஒரு சாதாரண மனிதன்தான் அவன் என்று அவனே தனது வாக்கு மூலமாக கூறியபோது, அவன் குறித்து மேலும் தேடலில் ஈடுபட்டதனால் விளைந்த பதிவுதான் இது.

இத்தனைக்கும் அவனை நான் இதுவரையில் நேரில் சந்தித்ததில்லை. அவன் எழுதிய பதிவுகள், படைப்புகள் ஊடாகவே அவனை அறிந்தேன்.

அவனது 70 வயது அகவையின்போது, கவியரசு கண்ணதாசன் தன்னை தனது வனவாசம் சுயசரிதையில் அவன் என தன்னை விளித்து எழுதியதை மனதில் அசைபோட்டவாறு, முருகபூபதி என்ற எழுத்தாளனை, ஊடகவியலாளனை, சமூகச் செயற்பாட்டாளனை அவன் என விளித்தே நான் பெற்ற தேடலிலிருந்து இந்தப் பதிவை எழுதத் தொடங்குகின்றேன்.

அதற்கு முன்னர் என்னைப்பற்றிய சுருக்கமான அறிமுகம். கிழக்கிலங்கையைச் சேர்ந்த எனது பெயர் கிறிஸ்ரி நல்லரெத்தினம். எனது மாமனார் இலங்கையில் பிரபலமான ஓவியர் – கேலிச்சித்திரக்காரர். அவரது பெயர் சௌந்தரராஜன். 'சௌ' என்ற பெயரில் ஓவியங்களும் கேலிச்சித்திரங்களும் வரைந்தவர். ஈழத்தின் மூத்த இலக்கிய ஆளுமைகள் எஸ்.பொ., மஹாகவி உருத்திரமூர்த்தி முதலானவர்களின் படைப்புகளுக்கும் கொழும்பில் இளம்பிறை அச்சகத்திலிருந்து வெளியான எம். ஏ. ரஃமானின் அரசு வெளியீடுகளிலும் ஓவியம் வரைந்தவர்.

அவரது வழித்தோன்றலான நானும் ஓவியத் துறையிலும் எழுத்துத்துறையிலும் ஈடுபடுகின்றேன் என்பதையும் தற்பொழுது ஆஸ்திரேலியா மெல்பனில் நானும் வதிகின்றேன் என்பதையும் எனது ஓவியங் கள் மற்றும் எழுத்துக்களையும் எப்படியோ அறிந்து கொண்டதனால், இம்மாதம் தனது 70 வயது அக வையை அமைதியாக கொண்டாடும் அவன் என்று நான் விளிக்கும் முருகபூபதி பற்றி இங்கே நான் பெற்ற எண்ணப் பதிவுகளை அவனது பல வாக்குமூலங்களி லிருந்தே எழுதுகின்றேன்.

எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்த அந்தக் குழந்தையை வாரியணைத்து உச்சி முகர்ந்து தந்தை லெட்சுமணனின் கரங்களில் ஒப்புவித்தாள் தாய். குடும்பத்தின் முதல் மகன் என்ற பெருமிதம் அவர் கண்களில் புது ஒளியை தோற்றுவித்தது. தந்தை குனிந்து மழலையின் காதருகில் ஒரு மந்திரம் போல் முருக....பூபதி என நீட்டி விளித்துவிட்டு அவனை மெதுவாக மீண்டும் தாயின் அரவணைப்பிற்கு சொந்தமாக்கினார்.

அன்று அம்மழலையுடன் ஒட்டிக் கொண்ட 'முதல்' எனும் வார்த்தை அவன் வாழ்வில் நிரந்தரமாகவே அழியாச் சுடராய் அன்று ஏற்றிவைக்கப்பட்டது.

இலங்கையில் வடமேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டத்தில் அவன் பிறந்த நீர்கொழும்பூரில் 1954 ஆம் ஆண்டு அவனது வீட்டருகே விஜயதசமி தினமன்று இந்து தமிழ்ப்பிள்ளைகளுக்காக தொடங்கப் பட்ட ஆரம்பப் பாடசாலை விவேகானந்தா வித்தியால யத்தில் முதல் மாணவனாக ஏடு துவக்கி வித்தியாரம்பம் செய்வித்து இணைத்துக் கொள்ளப்பட்டான்!

இவனது சேர்விலக்கம் : 1.

இது அவனது முதலாம் 'முதல் ' !

வருடங்கள் உருண்டோடின .......

1975 ஆம் ஆண்டு இந்த இலக்கிய குழந்தை யின் இருபத்தியொராவது பிறந்த நாள் பரிசாக இவன் எழுதிய 'கனவுகள் ஆயிரம்' எனும் முதல் சிறுகதை மல்லிகை இதழில் வெளிவந்தது. அவன் பிறந்த நெய்தல் மண்ணின் வாழ்வை சித்திரிக்கும் கதை இது. அவன் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அக்கதையை ஆயிரம் தடவைக்கு மேல் படித்ததாய் பின்னாளில் சொன்னான். இந்த முதல் சிறுகதையை உள்ளடக்கிய 'சுமையின் பங்காளிகள்' எனும் இவனின் முதல் சிறுகதைத் தொகுப்பிற்கு 1976 இல் இலங்கை தேசிய சாகித்திய விருது கிடைத்தது.

ஆம், இது அவன் இரண்டாம் 'முதல்'!

இலங்கையின் மூத்த முற்போக்கு எழுத்தாளர் டொமினிக் ஜீவா கண்டெடுத்த முத்துக்களில் ஒன்று இவன். இவனது சிறுகதைகளை முதலில் கண்டு கொள்ளாத வீரகேசரி, தினகரன் பத்திரிகைகள் 1976 ஆம் ஆண்டு இவனது முதல் சிறுகதைத் தொகுப்பிற்கு தேசிய சாகித்திய விருது கிடைத்ததும் இவனது படத்துடன் செய்திகளை வெளியிட்டு தமக்கு கௌரவம் தேடிக்கொண்டன.

தனது முதல் சிறுகதையின் படைத்தலை இப்படி விவரிக்கிறான்:–

மல்லிகை ஆசிரியர் 1970 - 1971 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து மாதாந்தம் கொழும்புக்கு வரும் பொழுது நீர்கொழும்பிலிருக்கும் அவரது சகோதரர் குடும்பத்தினரைப் பார்ப்பதற்காக வருவார். அச்சமயங்களில் ஏற்கனவே இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்ட நீர்கொழும்பூர் முத்துலிங்கம், மு.பஷீர் மற்றும் செல்வரத்தினம், தருமலிங்கம், சந்திரமோ கன், பவாணிராஜா, நிலாம் உட்பட பலர் அவரைச் சந்தித்துக் கலந்துரையாடுவார்கள்.

இச்சந்திப்புகள் பெரும்பாலும் நீர்கொழும்பு கடற்கரையில் இடம்பெறும். நானும் ஆர்வமுடன் கலந்துகொண்டு உரையாடுவேன். மல்லிகை ஜீவாவுடன் விவாதிப்பேன். அச்சமயம் ஜெயகாந்தனைப்பற்றி அவர் காரசாரமான விமர்சனக்கட்டுரைத் தொடர் எழுதிக் கொண்டிருந்தார். அத்தொடர் எமது கலந்து ரையாடலில் விவாதப் பொருளாகும். எனது கருத்துக் களை கூர்ந்து அவதானித்த ஜீவா ஒருநாள், நிறைய விவாதிக்கிறீர். நீரும் எழுதலாமே என்றார். அவர் தந்த உற்சாகத்தில் கனவு என்ற சிறுகதையை எழுதினேன். அச்சிறுகதை நீர்கொழும்பு பிரதேசத்தில் கடற்தொழிலை நம்பி வாழும் மக்களைப் பற்றியது. அதனை, செல்வ ரத்தினம் (இவர் தற்போது பிரான்ஸில் இணையத் தளம் நடத்துகிறார்), நீர்கொழும்பூர் முத்துலிங்கம் ஆகியோரிடமும் காண்பித்தேன. அதற்கு முன்னர் எமது பிரதேச மக்களின் பேச்சு மொழி வழக்கில் எவ ரும் படைப்பிலக்கியம் படைத்திருக்கவில்லை. குறிப் பிட்ட கனவு கதை மீனவ மாந்தரின் கனவுகளின் சித் திரிப்பாக அமைந்திருந்தமையால் 'அதனை எதற்கு அனுப்பவிருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள். 'மல்லிகைக்கு' எனச் சொல்லிவிட்டு தபாலில் அனுப்பினேன். கனவுகள் ஆயிரம் எனத்தலைப்பிட்டு ஜீவா அதனை மல்லிகை ஜுலை இதழில் பிரசுரித்தார்.

இவ் வெற்றிகள் சாதாரணமாய் அவன் மடியில் வந்து விழவில்லை. உழைப்பு... உழைப்பு.... உழைப்பு!

வெற்றியின் இரகசியம் என்ன என்ற கேள்விக்கு அவன் சொன்ன விடை: ஆள் பலம், அரசியல் பலம், பண பலம் என்றைக்குமே தற்காலிகமானதுதான். ஆன்ம பலம்தான் நிரந்தரமானது. அதுதான் அடிப்படை!

அந்த 'முதல்' புது நூற்றாண்டிலும் தொடர்ந்தது!

2001 இல் இவன் எழுதிய 'பறவைகள்' எனும் முதல் நாவலுக்கு இலங்கை தேசிய சாகித்திய விருது பெற்று கௌரவிக்கப்பட்டான்.

இந்நாவலைப்பற்றி ஒரு விமர்சகர் இப்படிச் சொல்கிறார்: உறவுகளிடையே உள்ள ஆத்மார்த்தமான பந்தத்தையும் உறவுகளின் சிக்கல்களையும் இந்த நாவல் அழகுற காட்சிப்படுத்தியுள்ளது. இனப்போராட்டம், யுத்தம், அதனால் இடப்பெயர்வு, வர்க்க அரசியல், ஜாதி மற்றும் தீண்டாமை போன்ற பிரச்சினைகளுக்கு இடையில் இலங்கை தமிழ் மக்களின் இரண்டு சகாப்தத்திற்கு முந்தைய வாழ்வை படம்பிடிக்கிறது நாவல். நீர்கொழும்பை மையமாக வைத்து இயங்கும் இந்த நாவல், நம்மை நீர்கொழும்பில் ஒவ்வொரு வீதியிலும், கடற்கரையிலும், அங்குள்ள கோவில்களிலும் ஒரு மெய்யான தரிசனத்தைத் தருகிறது.

இது இவன் மூன்றாம் 'முதல்'!

இவன் 'முதல்' தரிசனத்தை பீடத்தில் வைத்துவிட்டு இந்த இலக்கிய ஆளுமை நடந்து வந்த பாதையை சிறிது பார்ப்போமா?

வாயில் வெள்ளிக்கரண்டியுடனும் கையில் தங்கத் தட்டுடனும் பிறந்தவனல்ல இவன். தான் கடந்து வந்த முள் பாதையை இப்படி ஒரு பேட்டியில் நனவிடை தோய்கிறான்:

எனது அப்பா நான் பிறந்து சில வருடங்களில் எனது பெயரில் முருகன் லொட்ஜ் என்ற சைவக் ஹோட்டலை நீர்கொழும்பு பிரதான வீதி பஸாரில் தொடங்கினார். அப்பா ஒரு பரோபகாரி. இரக்க சிந்தனையுள்ளவர். பசி என்று வந்தவர்களுக்கெல்லாம் பசிபோக்கியவர். அத னால் சற்று பொறுப்பில்லாமலும் நடந்துகொண்டவர். கடன் தொல்லைக்கும் ஆளானவர். சிறிது காலத்தில் அந்த சைவக் ஹோட்டல் நட்டத்தினால் மூடப்பட்டது. வீடு வறுமையில் வாடியது. அப்பா வேலை தேடி அலைந் தார்.

எங்கள் வீடும் வறுமைக்கோட்டில் இருந்தமையால், அதிகாலையே எனது அம்மா எழுந்து தோசை, இடியப்பம் தயாரித்து சட்னி – சம்பலும் வைத்த கடகங்களுடன் பாட்டியையும் அக்காவையும் என்னையும் அனுப்பி வைப்பார். அந்த நெடிய கடற்கரையில் வந்து குவியும் கடற்றொழிலாளர்களின் காலைப்பசியைப் போக்குவதற் காக ஏழு – எட்டு வயதில் அந்தத் தொழில் செய்துவிட்டு வந்து தான் பாடசாலைக்குச் சென்று வந்தேன்.

ஒரு தடவை கொப்பி புத்தகங்கள் வாங்குவதற்கு தவித்தபொழுது, அருகிலிருந்த செபஸ்தியார் தேவால யத்தின் முன்றிலில் எனது பாட்டி எனக்காக கடலை விற்றார்கள்.

நானும் அவர்களுடன் சென்று அதிகாலை ஒருமணிவரையில் அந்த தேவாலய முன்றலில் அமர்ந்தேன். எனக்கு பாடப்புத்தகம் வாங்குவதற்காகத்தான் பாட்டி கடலை அவித்தார்கள், விற்க வந்தார்கள் என்பது அப்போது எனக்குத் தெரியாது. அவர்களது மடியில் நான் உறங்கிவிட்டேன். கடலை வியாபாரம் முடிந்து பாட்டி என்னை தட்டி எழுப்பி சொன்னார்கள், "தம்பி உனக்கு புத்தகம் வாங்கக் காசு கிடைத்துவிட்டது. எப் படி? என்று கேட்டேன். கடலை வித்தோமில்லையா என் றார்கள் புன்முறுவலுடன் நான் பாட்டியை கட்டி அணைத் துக் கொண்டேன்!

இதில் கவனிக்கவேண்டிய முக்கியமான அம்சம் ஒன்றுள்ளது. அதாவது எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு இருக்கிறது. எனக்கு பாடப்புத்தகம் வாங்க கையில் பணமில்லாதிருந்தது ஒரு பிரச்சினைதான். அதற்கான எளிமையான தீர்வு எனது அருமைப் பாட்டியிடமிருந் திருக்கிறது. அவர்கள் பாடசாலை சென்று படித்தவர் இல்லை. வெறும் கைநாட்டுத்தான். ஆனால், தனது பேரன் படிக்கவேண்டும் என்று விரும்பினார்கள். தீர்வுக் காக அழுது புலம்பிக்கொண்டிருக்கவில்லை. இயங்கி னார்கள்!

இந்த எளிய உண்மையை நான் காலம்கடந்து புரிந்துகொள்கின்றேன். இதுவே நான் ஆஸ்திரேலியா விற்கு புலம்பெயர்ந்ததும் நம் தாய் நாட்டில் உள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு நிதியுதவி செய்யும் வேட் கையுடன் நண்பர்களுடன் இணைந்து 'இலங்கை மாணவர் கல்வி நிதியம்' எனும் அமைப்பை 1988 இல் நிறுவ வித்திட்டது.

இத்தனை அல்லல்களுக்கிடையில் படித்து புலமைப் பரிசில் பெற்று, யாழ் மண்ணுக்கு சென்றாலும் வீட்டின் மீதான நேசத்தால், எங்கள் ஊரின் பாசத்தால் ஓடிவந்து விட்டேன்.

இவனுக்கு இலங்கைத் தமிழ் சமூகம் என்றும் போலவே ஒரு முகவரி எழுதி முத்திரை குத்தி ஒரு சமூகப் பெட்டகத்தினுள் அடைக்க முயன்றது. சமூகம் போட்ட போர்வைகளை லாவகமாய் அகற்றி அவன் சொன்னது இது:

அப்பாவின் பூர்வீகம் இந்தியா என்பதால் நான் இலக்கிய உலகில் நன்கு அறிமுகமானதன் பின்னர், ஐரோப்பிய நாடொன்றிலிருந்து ஒரு அன்பர், என்னை இந்தியாக்காரன், வடக்கத்தியான் என்று முகவரி தந்தார். நீர்கொழும்பிலிருந்தவன் என்ற காரணத்தினாலும் நீர்கொழும்பான் என்றும் மற்றும் ஒரு முகவரி தந்தார்கள். ஆயினும் நான் நேசிக்கின்ற – என்னை நேசிக்கின்ற – இலக்கியவாதிகள் இலங்கையில் மட்டுமன்றி உல கெங்கும் பரந்து வாழ்ந்து, மனிதன் என்ற முகவரியைத் தந்திருக்கிறார்கள். அதனை தக்கவைத்துக்கொள்வது தான் எனது வாழ்வும் பணிகளும்!

(மிகுதி நாளை மாலைப் பிரசுரத்தில்)

# ஆலய வழிபாடு கிரமமாக நடைபெற்றால்தான் மக்களுக்கு நோய் நொடியற்ற வாழ்வு கிட்டும்

## சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி தெரிவிப்பு

ஆலயங்களில் உற்சவங்கள் வழிபாடுகள் நடைபெற்றால்தான் நாட்டில் மக்களுக்கு நோய் நொடியில்லாத வாழ்வு கிடைக்கும். நாட்டை ஆளுகின்ற அரசாங்கத்திற்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு அனைத்து இந்து ஆலயங்கள் சார்பிலும் இந்து மக்கள் சார்பிலும் நன்றிகளை தெரிவிக்கின்றேன் எனப் பிரதிஷ்டா பிரதம சிவாச்சாரியார் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவாகம கலாநிதி அருள் ஜோதி ஸ்ரீ ஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை - வீரமுனை சிந்தாயாத்திரைப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் சிந்தாயாத்திரைப் பிள்ளையார் தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ கு. நிமலேஸ்வரக் குருக்கள் பங்குபற்றலுடன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு -

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மத வழிபாட்டுத்தலங்களில் மக்கள் கூடி வழிபட முடியாத சூழ்நிலையுடன் அரசாங்கம் சட்டம் ஒன்றைப் பிறப்பித்திருந்தது. அந்த தருணத்தில் சர்வதேச இந்து மத குருபீடம் பலதடவைகள் ஆலயங்களில் பூஜைகள் நடைபெற வேண்டும்.

இவ்வாலயங்களில் உற்சவங்கள் வழிபாடுகள் நடைபெற்றால் தான் நாட்டில் மக்களுக்கு நோய் நொடியில்லாத வாழ்வு கிடைக்கும். நாட்டை ஆளுகின்ற அரசாங்கத்திற்கும் நன்மை கிடைக்கும் என்று பல தடவைகள் ஊடகங்களின் ஊடாக வேண்டுகோள் விடுத்திருந்தோம்.

ஆலயங்களுக்கு 100 அடியவர்களாவது அனுமதிக்கப்பட வேண்டும் என பல தடவைகள் கூட வேண்டுகோள் விடுத்திருந்தோம். அந்த வகையில் கடந்த வெள்ளிக்கிழமை ஆலயங்கள் மத வழிபாட்டுத் தலங்களில் வழமையான முறையில் வழிபாடுகளில் கலந்துகொள்ளலாம் என அரசாங்கமும் சுகாதாரத் துறையினரும் அனுமதி அளித்திருக்கின்றன.

இதனை முன்னிட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும், சுகாதாரப் பிரிவிற்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் சர்வதேச இந்துமத குருபீடத்தின் சார்பிலும் இலங்கை வாழ் அனைத்து இந்து ஆலயங்கள் சார்பிலும் இந்து மக்கள் சார்பிலும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றது. - என்றார்.

# கம்பஹா மாவட்டத்துக்கு 5 இலட்சம் சினோபோர்ம்

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட சினோபோர்ம் தடுப்பூசிகளில் 5 லட்சம் கம்பஹா மாவட்டத்துக்கும் 3 லட்சம் களுத்துறை மாவட்டத்துக்கும் வழங்கப்படுமென இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அத்துடன் நுவரெலியா, பதுளை, மாத்தளை, அநுராதபுரம், காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு தலா ஒரு லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டுக்கு மேலும் 20 லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# நீராடச்சென்ற மாணவன் முல்லைத்தீவில் காணோம்



முல்லைத்தீவு - துணுக்காய், உதயசூரியன் நகர் பகுதியில் வசிக்கும் விஜயகுமார் விதுசன் என்ற மாணவன் காணாமல் போயுள்ளார் என மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் அவரது பெற்றோரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் குறித்த மாணவன், வீட்டுக்கு அருகிலுள்ள கிணற்றில் நீராடுவதற்கு செல்கிறேன் எனக் கூறிவிட்டுச் சென்றுள்ளார்.

இவ்வாறு சென்ற மாணவன், நீண்ட நேரமாக வீடு திரும்பாதமையால், அவரது பெற்றோர்கள், கிணற்றுக்கு அருகில் சென்று பார்த்தபோது, அவர் எடுத்துச் சென்ற உடைகள் மாத்திரம் அங்கு கிடந்துள்ளன. மேலும் அம்மாணவன் எடுத்துச் சென்ற சவர்க்காரம் மாங்குளம் துணுக்காய் வீதியில் அவரின் வீட்டுக்கு அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் இருந்துள்ளது.

இதனால் குழப்பமடைந்த பெற்றோர் உடனடியாக பொலிஸாருக்கு சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தினர். இந்நிலையில் மாணவனை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் மற்றும் அப்பிரதேச மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த மாணவனைக் கண்டவர்கள், 0770871475 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு உடனடியாக அறியத்தருமாறு உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் கொவிட் காவு 100 பேரைத் தாண்டியுள்ளது

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே கொரோனா வைரஸ் தொற்றால் 100 பேர் இது வரை உயிரிழந்துள்ளனர் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 6 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் சிவப்பு வலயமாகக் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

மாவட்டத்தில் இதுவரை 7 ஆயிரத்து 199 பேர் கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கொரோனா சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளில் இருந்து 4 ஆயிரத்து 995 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

மேலும் 1,060 பேர், தொடர்ந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை மட்டக்களப்பு, காத்தான்குடி, ஏறாவூர், கோறளைப்பற்று மத்தி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி ஆகிய 6 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகள் தொடர்ந்தும் சிவப்பு வலயமாக அடையாளம் காணப்பட்டுள்ளன. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒலிம்பிக் போட்டியில் பங்குபற்றுவோருக்கு இராணுவத் தளபதி வாழ்த்துத் தெரிவிப்பு

எதிர்வரும் ஜூலை 23 தொடக்கம் ஒகஸ்ட் 8 வரையில் ஜப்பானின் டோக்கியோ நகரத்தில் இடம்பெறவுள்ள 32 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் - 2020 இல் பங்கேற்கவுள்ள முதலாவது இலங்கை இராணுவத்தின் நடுவர் மற்றும் இலங்கைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றவுள்ள வீர, வீராங்கனைகள் (09) இலங்கை இராணுவ தலைமையகத்தில் தேசிய விளையாட்டு தெரிவுக்குழு தலைவரும் பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வாவை சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட ஒலிம்பிக் குழுவின் தலைவர் சுரேஷ் சுப்பிரமணியம், துப்பாக்கிச் சுடுதல் அணியின் தலைவர் பிரதீப் எதிரிசிங்க, ஒலிம்பிக் போட்டிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் டெஹானி எகொடவெல (ரைபில் போட்டிகள்), மற்றும் நிலூக கருணாரத்ன (ஒற்றையர் பெட்மிண்டன் போட்டிகள்) ஆகியோர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுடன் எண்ணங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

இலங்கை இராணுவ பொதுச்சேவை படையணியின் லெப்டினன் கேணல் டீ.எம்.டி.சி. திசாநாயக்க, 32 ஆவது ஒலிம்பிக் போட்டிகள் - 2020இன் துப்பாக்கிச் சுடுதல் போட்டிகளின் நடுவராக பங்கெடுக்கவிருப்பதுடன், இலங்கை இராணுவத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கும் முதலாவது அதிகாரியும் அவராவார். இவர் இலங்கை இராணுவத்தின் சிறந்த துப்பாக்கிச் சூட்டாளர்களில் ஒருவர். ஒலிம்பிக் போட்டிகளில் துப்பாக்கிச் சுடும் போட்டிகளின் நடுவர்களுள் ஒருவராக லெப்டினன் கேணல் டீ.எம்.டி.சி. தசநாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளமை இலங்கை இராணுவத்துக்கும் இலங்கைக்கும் கௌரவமாகும். தனது தொழில்முறை வாழ்வில் பல்வேறு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் நடுவராக பணியாற்றியுள்ள லெப்டினன் கேணல், டீ.எம்.டி.சி. தசநாயக்க அதனுடன் தொடர்புடைய பல்வேறு பயிற்சிகளையும் பெற்றுள்ளார். 2003 ஆம் ஆண்டில் இருந்து தேசிய துப்பாக்கிச் சுடும் கழகத்தில் பல பதவிகளையும் வகித்துள்ளார்.

இதன்போது இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்கும் வீர, வீராங்கனைகளுக்கு வாழ்த்துக் கூறிய ஜெனரல் சவேந்திர சில்வா, சந்திப்பில் கலந்துகொண்ட வீர வீராங்கனைகளுக்கு தளபதியால் பாராட்டுச் சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன், பணப் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.



அதேபோல், தற்போதும் இத்தாலியில் பயிற்சிகளில் ஈடுபட்டிருக்கும் புகழ்பெற்ற ஓட்ட வீரரான லான்ஸ் கோப்ரல் சுபுன் அபேகோன் இம்முறை ஒலிம்பிக் போட்டிகளில் பங்கெடுக்கவுள்ளார்.

விளையாட்டுத்துறை அமைச்சால் நியமிக்கப்பட்ட தேசிய விளையாட்டு தெரிவுக் குழுவின் தலைவர் ஜெனரல் சவேந்திர சில்வா ஒலிம்பிக் வரலாற்றில் ஒலிம்பிக் போட்டிகளில் பங்கெடுத்து இலங்கைக்கு பதக்கங்களை வென்று கொடுத்த விதம் தொடர்பில் நினைவுகூர்ந்ததோடு அவர்களுக்கு பாராட்டுகளையும் தெரிவித்தார்.

அதேநேரம் இந்நாட்டின் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவது தொடர்பில் காண்பிக்கும் அர்ப்பணிப்புக்காக ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு அதிகாரிகளும் வீர வீராங்கனைகளும் பாராட்டுக்களை தெரிவித்தனர்.

இம்முறை இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி 9 வீர, வீராங்கனைகள் பங்கெடுக்க உள்ளதோடு, மெடில்டா கால்ஸன் (குதிரை ஓட்டும் போட்டி), மில்கா கிஹானி டி சில்வா (ஜிம்னாஸ்டிக் போட்டிகள்), தெஹானி எகொடவெல (மகளிர் துப்பாக்கிச் சுடும் போட்டிகள்), மெதிவ் அபேசிங்க (நீச்சல் போட்டிகள்), நிலூக கருணாரத்ன (பெட்மிண்டன் போட்டிகள்), ஷமர தர்மவர்தன (மல்யுத்த போட்டிகள்), நிமாலி லியனாரச்சி (800 மீற்றர் மகளிர் ஓட்டப் போட்டிகள்) மற்றும் இராணுவத்தைச் சேர்ந்த சுபுன் அபேகோன் (100 மீற்றர் ஓட்டப் போட்டிகள்) ஆகியோர் பங்கெடுக்கவுள்ளனர்.

# மன்னாரில் இரத்ததானம்

மன்னார் - அடம்பன் பிரதேச வைத்தியசாலையில் இரத்ததான முகாம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் மாந்தை மேற்கு பிரதேசச் செயலகம் மற்றும் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதையம் ஆகிய வையும் இணைந்து, இந்த இரத்ததான முகாமை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அடம்பன் பிரதேச வைத்தியசாலையில் நடத்தின.

குறித்த நிகழ்வை மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் எஸ்.கேதீஸ்வரன் மற்றும் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் அடிகளார் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

இதில் இளைஞர்கள் மற்றும் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.07.2021இல் வெளியிடப்பெற்றது.